DINA MANI
Date. 11/12/2018

-15-

# 'பிளாஸ்டிக் மாசில்லா தமிழகம்'

## விழிப்புணர்வுப் பிரசார வாகனம் தொடக்கம்



பிளாஸ்டிக் மாசில்லா தமிழகத்தை உருவாக்கும் வகையில் தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை விழிப்புணர்வு பிரசார வாகனத்தைத் தொடங்கி வைக்கிறார் முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி. உடன் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் உள்ளிட்ட அமைச்சர்கள்.

சென்னை, டிச. 10: 'பிளாஸ்டிக் மாசில்லாத தமிழகம்' என்பதை உருவாக்க, விழிப்புணர்வு பிரசார வாகனத்தை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி திங்கள்கிழமை தொடங்கி வைத்தார். இதற்கான நிகழ்ச்சி தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இதுகுறித்து தமிழக அரசு திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்குகளுக்கு தமிழகத்தில் வரும் ஜனவரி 1-ஆம் தேதி முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் தாள்கள், தெர்மாகோல் தட்டுகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட காகிதத் தட்டுகள், காகிதக் குவளைகள், பிளாஸ்டிக் தேநீர் குவளைகள், பிளாஸ்டிக் பைகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட பைகள், தண்ணீர் பாக்கெட்டுகள், உறிஞ்சு குழாய்கள், பிளாஸ்டிக் கொடிகள் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளன.

பிளாஸ்டிக் மாசில்லாத தமிழகத்தை முன்னிலைப்படுத்தும் வகையிலும், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தவும் நடமாடும் விழிப்புணர்வுப் பிரசார வாகனத்தை முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

இந்தப் பிரசார வாகனம் தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும்.

தமிழக அரசின் பிளாஸ்டிக் மாசில்லாத தமிழகம் என்ற திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த இந்த வாகனப் பிரசாரம் உறுதுணையாக இருக்கும் என தமிழக அரசு தெரிவித்துள்ளது.

தலைமைச் செயலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம், சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கே.சி.கருப்பணன், தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை முதன்மைச் செயலாளர் ஷம்பு கல்லோலிகர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.